தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 கன்னி (அக்டோபர் — I) விலை உருபா 1-50 (இதழ் எண்: 159)

தனித்தமிழ் நாடு உருவாவதை எவராலும் தடுக்க இயலாது!

அண்மையில் சென்னையில் **பாட்டாளி மக்கள் கட்சி** நடத்திய **தமிழர் வாழ்வுரிமை மாநாடு** அதன் அமைப்பிலும், செயற்பாடுகளிலும், அது நடத்திய பேரணியிலும், இறுதியில் அது நிறைவேற்றிய தீர்மானங்களிலும், தமிழகப் பார்ப்பனியத் தலைமையரசும், தில்லியின் பார்ப்பனீய முதலாளிய அடக்குமுறை அனைத்ததிகார அரசும் மிகவும் அச்சம் கண்டு ஆடிப்போய் இருக்கின்றன.

குறிப்பாக, தமிழக முதல்வர் செயலலிதா இப்படியொரு மாநாடும், அதன் செயற்பாடுகளும் நடைபெறும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. அதே போழுது தில்லி உள்துறை அமைச்சர் சவானும், தலைமையமைச்சர் நரசிம்மராவும் இந்த மாநாட்டால் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர். ஆனால் அதை உடனடியாகக் கண்டு கொள்ளாதது போல் நடந்து கொண்டனர்; கொள்கின்றனர். இனி, போகப் போகத்தான் அவர்களின் மறைமுக நேர்முகத் தாக்கங்கள் தெரிய வரும்.

அரும்பாடுபட்டு நடத்தி முடிந்த இம்மாநாட்டினாலும், அது நடத்திக் காட்டிய பேரணியாலும், இறுதியில் அது நிறைவேற்றிய தீர்மானத்தினாலும், **பாட்டாளி மக்கள் கட்சியும்**, அமைப்பும் தலைமையும், உறுப்புகளும் மிகப் பெறும் வெற்றி பெற்றுள்ளன என்பதை எவருமே மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது. இஃதொரு தமிழின வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி மட்டுமன்று; தமிழர்களின் இன, நாட்டு, அரசியல் முன்னேற்றத்தில் ஒரு சிறந்த திருப்பு முனையுமாகும், இதனால் **தமிழரின் தேசிய இனத் தன்னுரிமைக் கோரிக்கைக்கு** ஒரு வலிவும், **தமிழ்நாட்டின் தனியாட்சிக் கொள்கைக்கு** ஒரு பொலிவும் உண்டாயிருக்கின்றன என்பதை எவரும் மிகையென்று கூறமுடியாது. **பாட்டாளி மக்கள் கட்சியும்**, அதன் அமைப்பாளராகிய பெருமை மிகு மருத்துவர் **இராமதாசும்** தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய கட்சியாகவும் தலைமையாகவும் இதன் வழி அடையாளம் காட்டியுள்ளார் என்றே சொல்ல வேண்டும். வெறும் 'சாதிக் கட்சி' என்றும், 'பிரிவினை'வாதக் கட்சி என்றும், 'வன்முறைக் கட்சி' என்றும், அதில் உள்ளவர்களும், அதை ஆதரிப்பவர்களும், 'தீய சக்திகள்' என்றும், 'தேசத் துரோகிகள்' என்றும், பார்ப்பனர்களோ, அவர்களின் இதழ்களோ, வடநாட்டு வல்லதிகாரக் காரர்களோ—இனிமேலும் அதையும் அதைச் சார்ந்தவர்களையும் எளிதாகக் குறைகூறி அல்லது குற்றஞ் சாட்டி, அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் தமிழர்களுக்கென்று இலங்கையிலும், ஏன் இந்தியாவிலும் கூட ஒரு **தனித்தமிழீழமும், தனித்தமிழ்நாடும்** உருவாவதை எவராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

ஒரு தேசிய இனம்' புதிதாக உருவாவதையே எந்த ஆற்றலாலும் தடுத்துவிட முடியாதபொழுது, ஏற்கனவே பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே

Scanned with CamScanner

உருவாகி, அதற்கான மொழி, வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றைத் தனித் தன்மையுடன் படைத்துக் கொண்டு ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகள் அரசு, ஆட்சி வரலாறுகளை-யும் பெற்றிருக்கின்ற தமிழினம், இன்றைய வட நாட்டுப் பார்ப்பனிய, முதலாளிய இந்தி வெறியர்-களிடம் தன்னுரிமையும், தனியாட்சியும் கேட்கக் கூடாது என்பது, முட்டாள்தனமும், முரட்டுத்தன-மும் ஆகும் என்பதை அனைவருமே உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்த ஆட்சி வெறியர்களுக்கு, இங்குள்ள பொதுவுடைமைக் காரர்களும் துணையாக நிற்பது-தான் நமக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. இவர்கள் நடத்தும் வகுப்பு(வர்க்க)ப் போராட்டம், தேசிய இனம் விடுதலைபெறுத நிலை-யில் பொருளற்றது; வீணானது. இதுபற்றி மார்க்சு தெளிவாகத் தெரிவிக்கிருர்.

"தேசிய இன விடுதலைப் போராட்டத்தைப் புறக்கணித்துவிட்டு, வகுப்புச் சிக்கலை (வர்க்கப் பிரச்சினையை—அஃதாவது ஏழை, பணக்காரன் சிக்கலை)முன்னிலைப்படுத்துதல், வகுப்பு (வர்க்க)ப் புரட்சியையே இழிவுபடுத்துவதாகும்".

—மார்க்சு 'Valgarization of class—struggle' பக் : 39 Class and Nations.)

"பிரிந்துபோகும் உரிமையுள்ள முழக்கமே தேசிய இன விடுதலைக்கான முழக்கம். அஃதில்லா-மல் பிரிந்துபோகும் உரிமையற்ற தன்னாட்சி முழக்கம் தேசிய இன நசுக்கலுக்கான முழக்கமே. இது பொய்யான கோரிக்கையும் ஆகும். இது நிகரமைக்கு(சோசலிசத்திற்கு)ச் செய்யும் இரண்ட-கமுமாகும்" என்பது இலெனின் தரும் விளக்க-மாகும். —வி. ஐ. இலெனின் "The socialist revolution and the right of nation to self-determination.)

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம் பார்க்க)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசியத் தன்னுரிமை என்பது ஏதோ மக்கள் நலத்துக்கு மாறான கோட்பாடு அன்று. அப்படியே தன்னாட்சி உரிமை—தனிநாட்டுக் கொள்கை—என்பதும் அரசியல் கொள்கைக்கே ஆகாத கோரிக்கையும் அன்று. மக்களரசின் படிநிலை (பரிமணு) வளர்ச்சியே அவை.

இந்தியா ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்-டுடனும் இருக்கவேண்டும் என்று சொல்பவர்கள், ஏதோ மக்கள் நலம், நாட்டு நலம் கருதுகிறவர்கள் போலும், தன்னுரிமை, தன்னாட்சி அல்லது தனி-யாட்சி என்று கோருபவர்கள் மக்கள் நலன், நாட்டு நலன்களுக்கு மாறுகச் சிந்திப்பவர்கள் போலும்-ஆளும் வகுப்பினரால், அரசினரால் ஒரு மாயை-யான ஒரு தவறான எண்ணம் மக்களிடையில் உரு-வாக்கப்படுகிறது. இது மக்கள் நலனுக்கே எதிரான சிந்தனையாகும்.

வழி வழியாக அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்-டும் அடிமைப் படுத்தப்பட்டும் வரும் ஓர் இனம், தன்மான உணர்வு கொண்டு, தனக்குள்ள—தான் இழந்துபோன வாழ்வியல் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும், போராடுவதும் தவறு என்று எந்த அரசியல் நலச் சிந்தனையாளரும் இதுவரை கூறிய-தில்லை.

இக்கால் ஆட்சியிலுள்ள பார்ப்பனிய—முதலா-ளிய ஆட்சியாளர்தாம் இதற்குக் குதர்க்கமான பொருளை எடுத்துக்கொண்டு மக்கள் நலத்துக்கு விரோதமான பொருளை அதற்குத் தந்து, மக்களி-டையில் தவறான கருத்துப் பரப்புதலை உருவாக்கி வருகின்றனர். ஒற்றுமை என்பதும் ஒருமைப்பாடு என்பதும் அதிகாரத்தாலோ அடக்குமுறையாலோ, உருவாக்கப்படுவன அல்ல. அவை ஓர் ஆட்சியின் கீழ் உள்ள மக்களிடையில் தானே உருவாகி, உணர்வு அடிப்படையில் வளர்ந்து மலர்ச்சியடைய வேண்டிய ஓர் அரசியல் மெய்ம்மம் (தத்துவம்) ஆகும். இதை வெறும் கருத்துப் பரப்புதலாலும் (பிரச்சாரத்தாலும்) கலை, பண்பாட்டுக் கூத்து-களாலும் உருவாக்கிவிட முடியாது என்பதைத் தமிழக முதல்வர் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள் நலக் கருத்துகளை—அவை எந்த வடிவில்—எந்தக் கோணத்தில் இருந்தாலும்—அவற்றை வளர விடுவதே நலமான மக்களாட்சிக் கோட்பாடாகும். ஆளும் வகுப்பினர் தங்கள் ஆட்சி அதிகாரம் பறிபோய் விடுமே என்னும் அச்சத்தால் அவற்றை அடக்கி ஒடுக்க முற்படுவார்களானால், அவை வெட்ட வெட்டத் தழைக்கும் வெள்வேல மரம்போல் பூதாகாரமாக வளர்ந்து, ஆட்சி அதி-காரங்களையே ஆட்டங்காணச் செய்யும் என்பதே மக்களாட்சி வரலாருகும்.

இதை நன்ருக உணர்ந்து, அதிகாரமும், காவல்துறையும் தம் கையில் உள்ளது எனும் எக்களிப்பில் முதலமைச்சர் செயலலிதா வரம்பு மீறிய அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் கடைப்பிடித்து, மக்கள் நலம் கருதும் தலைவர்களையும் சிந்தனையாளர்களையும் சிறைப்பிடிப்பதும், அவர்கள் மேல் வீணான பழிகளையும் குற்றச்சாட்டுகளையும் கூறித் தண்டிக்க முற்படுவதும் ஆட்சியின் எதிர்-காலத்தையே சிதைப்பதாகும் என்று எச்சரித்துக் கூற விரும்புகிறோம்.

எனவே நலமான அரசியல் நடைமுறை-களுக்கு வழியமைத்துக் கருத்து வேறுபாடுகளைக் கருத்தளவிலேயே எதிர்கொள்ள முயலுமாறு முதலமைச்சரையும் ஆளும் வகுப்பினரையும் அன்-புடனும் கடமையுணர்ச்சியுடனும் கேட்டுக் கொள் வதுடன், சிறைப்படுத்தியுள்ள தலைவர்களை விடு-விக்கவும் வேண்டிக்கொள்கிறோம்.

—இவ்வாறு பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் அறிக்கையில் கூறியுள்ளார். O

விடுதலைப் புலிகளை ஆதரிப்பதும், தனித்தமிழ் நாடு கேட்பதும் தேசவிரோதமன்று; அவ்வாறு கேட்பவர்கள் 'தீயசக்தி'களும் அல்லர்.

பாவலரேறு அவர்களின் அறிக்கை!

தமிழ் இனம் கடுமையான—மிகக் கொடுமையான ஒரு காலகட்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தமிழுக்காக, தமிழினத்திற்காக, தமிழ்நாட்டுக்காக உழைப்பவர்களெல்லாரும் 'தீய சக்திகள்' என்றும், 'தேச விரோதிகள்' என்றும் 'நாடு கடத்தப்பட வேண்டியவர்கள்' என்றும் குற்றஞ் சாட்டப் பெற்றுச் சிறைகளில் வைக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் மேல் கறுப்புச் சட்டங்கள் பாய்ந்திருக்கின்றன.

அண்மையில் தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில், தமிழர்களின் அரசியல், பொருளியல், இனவியல், வாழ்வியல் உரிமைகளுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களாகிய பெருமைக்குரிய மருத்துவர் இராமதாசு, பண்ணுருட்டி இராமச்சந்திரன், பேராசிரியர் தீரன், தலித்-ஏழுமலை முதலியவர்களால் சென்னையில் கூட்டப் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க "தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில்', வெளிப்படுத்தப் பெற்ற ஞாயமான, உண்மையான கருத்துகளையும், கோரிக்கைகளையும், தீர்மானங்களையும் தாங்கிக் கொள்ள இயலாத பார்ப்பனிய முதலாளிய அரசு, அத்தலைவர்களின் மேலும், அம்மாநாட்டில் பேசிய தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், கடல் தனசேகரன், மணியரசன். தியாகு முதலிய துணிவும் நேர்மையும் கொண்ட தமிழினத் தலைவர்கள் மேலும் தேசவிரோதம், சதி முதலிய கடுமையான சட்டங்களைச்சுட்டிக் குற்றவாளிகளாக்கி அவர்களைப் பொறுப்பில் வெளிவராதபடி சிறைப்படுத்தியுள்ளது. இது மிகவும் கண்டிக்கத் தக்கதும் எதிர்த்துப் போராடத்தக்கதுமான ஒரு கொடுமையான அடக்குமுறையாகும்.

இலங்கையில், சிங்கள அரசின் 'கொடுமை'களுக்கும் கொலை வெறிக்கும் இன அழிப்புக்கும் ஆளாக்கப்பட்ட தமிழினத்தைக் காக்க வேண்டியும் தங்களுக்கென்று இறைமையுள்ள ஒரு தனித்தமிழ் ஈழ நாட்டை உருவாக்கிக் கொள்ளவும், தங்கள் உயிர்களையும் மதியாது, பலவகை அழிவுகளுக்கும் இடையில் எழுந்து போராடி வரும் விடுதலைப் புலிகளாகிய தமிழினப் போராளிகளைத் தவறாகப் புரிந்து கொண்டு, அவர்களைக் கொடுமையாளர்கள் என்றும் வன்முறையாளர்கள் என்றும் கொள்ளையர்கள் என்றும் இழிவுபடுத்தி அவர்கள் இயக்கத்தை இங்குத் தடைப்படுத்தியும், அங்கு நேர்ந்த கொடுமைகளுக்குத் தப்பி இங்கு வந்த இலக்கக் கணக்கான ஏதிலி(அகதி)களை இங்கிருந்து விரட்டியடித்தும் வருகின்ற செயல்களைக் கண்டித்து அவர்களின் நேர்மையான, ஞாயமான கோரிக்கைகளை எடுத்துப் பேசுவது, எப்படித் தேசவிரோதம் ஆகும்?

பாலஸ்தீனர்களின் விடுதலையைப் பற்றியும், தென்னாப்பிரிக்கர்களின் அரசியல் உரிமைகளைப் பற்றியும் இங்குள்ள தலைவர்களும் நாமும் பேசவில்லையா? அங்குள்ள மக்களுக்காகப் போராடி வரும் தலைவர்களான யாசிர் அராபத்தையும் மண்டேலாவையும் நாம் வரவேற்றும், பாராட்டியும் நம் இந்திய அரசு அவர்களுக்குப் பற்பல உதவிகளையும் பரிசுகளையும் வழங்கவில்லையா? அவையெல்லாம் தேச விரோதமில்லாத பொழுது, 'சதி'யில்லாதபொழுது, தமிழீழ விடுதலையைப் பற்றியும் தம்பி பிரபாகரனைப் பற்றியும் பேசுவது மட்டும எப்படி தேசவிரோதமும் சதியும் ஆகும்?

இனி, இவையன்றித் தமிழ்நாட்டுக்கும் தமிழின மக்களுக்கும் ஞாயமாகக் கிடைக்க வேண்டிய அரசியல், பொருளியல், மக்களியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதும். கருத்துகள் கூறுவதும், கோரிக்கைகள் வைப்பதும் எப்படிக் குற்றமாகும்? இவையெல்லாம் குடியரசு அமைப்பிலுள்ள ஒரு குடிநாயக ஆட்சியின் நடைமுறைகள் இல்லையா? தாக்கமுற்ற—'பாதிக்க'ப்பெற்ற—மக்கள் தங்கள் இன உரிமைகளையும், வாழ்வியல் உரிமைகளையும் பேசுவது எழுதுவது எப்படித் தவறாகும்? தமிழர்கள் இந்தியாவின் ஒரு தேசிய இனமில்லையா? இங்குள்ள மற்ற தேசிய இனங்களைப் போல இத் தமிழ்த் தேசிய இனமும் தன்னுரிமை கேட்பதும், இனி அதுவும் நிறைவேறாதபொழுது, தனிநாடு கேட்பதுந்தான் எப்படித் தேச'விரோத' 'சதி' ஆகிவிடும்? அத்தகைய குரல் எழுப்புதல்கள், கோரிக்கை வேண்டல்களே குற்றம், சதி, தேச விரோதம் என்றால், குடியரசின், மக்களாட்சியின் இலக்கணம்தான் என்ன என்பதை ஆட்சியாளர்கள் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா?

அண்மையில் இரும்புத் திரைக்குப் பின்னால், பொதுவுடைமைக் கொள்கை என்ற பெயரில் மக்கள நலத்துக்கு எதிரான அனைத்ததிகார அடக்குமுறை ஆட்சி நடந்த உருசியா, அதன் நோக்கத்திற்கு எதிராகச் சின்னா பின்னப் பட்டுப் போய்விட்டது. இந்த உலக நாடுகளின் ஆட்சியாளர்களுக்கே ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

(தொடர்ச்சி 2 -ஆம் பக்கம் பார்க்க)

கொடுமை! மிகக் கொடுமை! செயலலிதாவின் பாதுகாப்பிற்காக ஆறுயிரம்(6000) காவலர்களா? அழிம்புத்தன ஆடம்பர ஆரவாரங்கள்!

அண்மையில் செப். 14-இல் திருச்சியில் நடைபெற்ற அண்ணா விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த முதல்வர் செயலலிதாவிற்கு வரலாறு காணாத வகையில், இதுவரை எங்குமே எவருக்குமே இல்லாத வகையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாநிலமெங்குமிருந்து 6000 ஆறுயிரம் காவல்துறையினர் அவருக்குப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது மாநிலத்திலுள்ள மொத்த காவலர் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்காகும்.

அண்ணாவின் பிறந்தநாளை ஒட்டிக் காவல்துறை, தியணைப்புத் துறையைச் சார்ந்த 63 பேர்களுக்குப் பதக்கங்களையும் பரிசுகளையும் வழங்கவே செயலலிதா திருச்சி வந்தார்.

அதற்காக நகர் வானூர்தி நிலையத்திலிருந்து, விழா நடைபெறும் விளையாட்டுத்திடல் வரை எங்குப் பார்த்தாலும் காவலர்கள் மயமாகவே திருச்சி இருந்தது. இதுவரை இத்தகைய பாதுகாப்பு எங்கும், எவருக்குமே கொடுக்கப்பட்டதில்லையென அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

63 காவலர்களுக்கும் தீயணைப்பு ஊழியர்களுக்கும் பதக்கங்களும் பரிசுகளும் வழங்க வேண்டாம் என்று எவருமே கூறார். ஆனால் அதற்காக அரசுப் பணத்தில் இவ்வளவு செலவுகளைச் செய்து கொண்டு ஒருமுதலமைச்சர் அங்குபோகவேண்டுமா?

ஒரு காவலரை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு அனுப்பி வைப்பதானால் எவ்வளவு செலவு, போக்குவரத்துக்கு, உணவுக்கு, தங்குவதற்கு—இவற்றுக்கெல்லாம் ஏற்படும் என்று அந்தச் செயலலிதாவுக்குத் தெரியவில்லையானால், அதைச் செலவழிப்பதில் அவர் கவலை கொள்ளவில்லையானால், அல்லது வருத்தப்படவில்லையானால், அவர் முதலமைச்சராக இருப்பதில், இந்த நாட்டிற்கு, நாட்டு மக்களுக்கு எவ்வளவு கேடு, பொருளிழப்பு என்று பொதுமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆறுயிரம் காவலர்களை ஓரிடத்தில் கூட்டி, மீண்டும் அவர்களை அவரவர் இடத்திற்கு அனுப்புவது என்றால் அவர்களுக்காக ஏற்படும் மக்கள் வரிப்பண வீண் செலவு எவ்வளவு என்பதை எண்ணிப்பார்க்கவேண்டாமா? காவலர் ஒருவர்க்கு, இந்த வகையில் ஏற்படும் போக்குவரத்து, தங்கல், உணவு, பணிப் படிகள், இன்னும் பிற செலவுகள் ஏறத்தாழ 500 உருபா அளவு வைத்துக் கொண்டாலும் 6000 (ஆறுயிரம்) காவலர்க்கு ஆகும் மொத்தச் செலவு முப்பது இலக்கங்கள் (30,000,00) ஆகவில்லையா? ஒரு சில மணிநேர நிகழ்ச்சிக்காக, ஒருவர் ஓரிடத்திற்கு வந்து போக, மக்கள் வரிப் பணத்தில் இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா? இஃது அடுக்குமா? இந்தப் பணத்தில் எத்தனைப் பொதுநலச் செயல்களை நிலையாக மக்கள் பயன் பெறுமாறு செய்யலாம் என்பது அரசில் இருப்பவர்களுக்குத் தெரியாதா? இல்லை, இந்த செயலலிதவுக்குத்தான் தெரியாதா?

இந்த 63 காவலர்களுக்கும் பிறர்க்கும் ஆன பரிசுகளையும் பணங்களையும், அவரவர் பணிசெய்யும் அதிகாரிகள் மூலமாகவே, அவரவர் பணியிடங்களிலேயே கொடுக்கச் செய்யலாமே? இதற்கு ஒரு முதலமைச்சர் தேவையா? அதற்கொரு ஆடம்பர ஆரவார விழா தேவைதானா? இந்த நிலையைத் தவிர்க்க பொதுமக்கள், முன் வர வேண்டாமா? எழுந்து போராட வேண்டாமா? ஊமைகளாகவும் ஆமைகளாகவும் மக்கள் இத்தகைய கொடுமைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தால் குடிநாயகம்(ஜனநாயகம்) எப்படிச் செயலபடமுடியும்? மக்களுக்கு நலன்கள் எப்படிக் கிடைக்கும்?

இந்த ஆடம்பர ஆரவாரத் திரைப்பட நடிகை முதலமைச்சரா அல்லது கடவுளா? இந்த அம்மாள் ஒருத்திக்காக இத்தனை வரிப்பணம் வீணா? இதை எப்படிப் பொறுத்துக் கொள்ளமுடியும்?

கழுதை அமைச்சர்களும் குதிரை அமைச்சர்களும் சேர்ந்து யானை முதலமைச்சருக்கு இவ்வாறு அழிம்புக்குத் துணைபோனால், மக்களுக்குத் துணையாக இருப்பவர்கள் யார்?

மக்கள் எதிர்த்துக் கேட்பதற்கு அறிவற்றவர்களாக—துணிவற்றவர்களாக வீரமற்றவர்களாக, அடிமைகளாக, அறியாமையுள்ளவர்களாக, கவர்ச்சிக்கு ஆட்பட்டவர்களாக—வெள்ளாட்டு, செம்மறியாட்டு மந்தைகளாக இருப்பதால்தானே அவர்களை ஏமாற்றி ஒப்போலை பெற்று அரசியலுக்கு வந்த இந்தக் காட்டெருமைக் கயமையாளர்

Scanned with CamScanner

கள் தங்கள் விருப்பப்படி களியாட்டமும், கொள்ளை-யடிப்புகளும் செய்ய முடிகிறது.

செயலலிதா வருகைக்காகத் திருச்சி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்ததாம்! எங்குப் பார்த்தாலும் கொடிகளும், தோரணங்களும், அணியார வண்டிகளும் எத்தனை எத்தனை? அவற்றுக்கெல்லாம் ஆகும் செலவுகள், வீண் முயற்சிகள், பொருள் பாழடிப்புகள், மாந்த ஆற்றல்கள் எவ்வளவு மிகுதி? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாவா?

இவையில்லாமல், எத்தனை ஆரவார அகம்பாவச் செயல்கள்! சுப்பிரமணியபுரம், 'டோல் கேட்' பகுதிகளிலெல்லாம் செயலலிதா, அண்ணா ஆகியோரின் (எம்.சி.ஆர். எல்லாம் எங்கே போனாரோ தெரியவில்லை!) மலைபோன்ற பெருமாண்டமான வெட்டுருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாகவும் சிறப்பாகவும் அந்த அம்மையாரின் ஆளை உருவத்திற்கு மட்டும் மிக மிக உயரமாக நான்கு வெட்டுருவங்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். இவற்றை எவரோ அரசுக் குத்தகைக்காரக் கயவாளிகளோ, அமைச்சக் கொள்ளையர்களோ அம்மையாரைக் குளிர்மைப்படுத்த அல்லது குளிப்பாட்டி, உடம்பைக் குளிர வைக்க வைத்திருக்கலாம். நேர்மையான ஆட்சி என்றால் இவற்றை வைக்க இசைவளிக்கலாமா? இஃதென்ன வேடிக்கை! புன்மை நாகரிகப் போலிச் செயல்கள்! யாரை ஏமாற்றி மயக்கிக் கொள்ளையடிக்க இந்த வேலைகள்? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இவை தவிர இன்னும் எத்தனை எத்தனையோ வேடிக்கைகள்! விளம்பர வெறிச் செயல்கள்! நகரிலுள்ள பெரியார், அண்ணா சிலைகள் எல்லாம் இந்த அம்மா வருகையின் பொருட்டு வண்ண விளக்குகளால் சுவடிக்கப்பட்டிருந்தனவாம்! அணியாரம் (அலங்காரம்) செய்யப்பட்டிருந்தனவாம்! இவர் வந்திறங்கும் வானூர்தி நிலையத்திலிருந்து விழாவிடத்திற்கு இவர் வருகின்ற வழியின் இருபுறத்திலும் இவருடைய படம் ஒட்டிய 5000 வாழ்த்து அட்டைகளைத் தூக்கிக் கொண்டு, 5000 மாணவர்கள், நின்றுகொண்டு, 'செயலலிதா நீடுழி வாழ்க !' என்று உரக்கக் கத்தச் சொல்லி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்! இந்த மொந்தையுடல் வந்து, இருந்து, எழுந்து செல்லும் சிறிது நேரத்திற்காக, அந்த விருந்தினர் மாளிகையின் முன் பகுதி முழுவதும்! பழங்களாலும் மலர்களாலும் புனைவு செய்யப்பட்டிருந்ததாம்! நல்ல வேளை! பள்ளிக் குழந்தைகளின் பிஞ்சுத் தலைகளை வெட்டித் தொங்கப் போடச் சொல்லவில்லை, இவற்றை ஏற்பாடு செய்த அமைச்ச முண்டங்கள்!) இவையன்றி அங்கு செயலலிதாவின் உருவத்தை ஒன்பது தவசங்களால் (தானியங்களால்) பெரிதாக உருவாக்கி வைத்திருந்தார்களாம். தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கெல்லாம் இவைபோன்ற திருக்கலியாண வேலைகளை விட, அரசுப் பணத்தைத் திட்டமிட்டுத் திருடுகிற செயல்களைவிட வேறு வேலைகள் ஏது ? ஆட்சி அமைந்த கடந்த ஒன்றறை ஆண்டுகளில் கணக்கிட்டால் இவர்களின் இதுபோன்ற செயல்களுக்காக ஈடுபட்ட காலமே ஓராண்டுக்கு மேலிருக்கும்! மீதி அரையாண்டுகளில் இந்த சின்னச் சின்ன அமைச்சுப் பூசாரிகள் தங்கள் தங்களின் வருகை, செலவுகளுக்காக இதுபோலவே செய்து கொண்ட ஆடம்பர, ஆரவாரந்தனமான விழா வேடிக்கைகள் நடத்தவே நேரம் போதாமலிருந்திருக்கும் !

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இந்தத் தமிழ்மக்கள் பேசாமல் வாய் பொத்திக் கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்களே, அதைவிட வியப்பான செய்தி உலகில் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதுதான் இந்த மண்ணாங்கட்டிக் குடியரசில் நாம் சொல்ல முடிந்த கருத்தாக இருக்கமுடியும் என்று கருதிக் கொள்க!

இருப்புக் கோடரி

முட்டாளே! முட்டாளே! ஏமாளி முட்டாளே!

"தமிழகத்தில் வாழும் பிற மாநிலத்தவர்களும் தமிழர்களே என்ற உயரிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தைக் கூறியவர் அண்ணா"

கல்வி அமைச்சர் அரங்கநாயகம்
15.9.92 அன்று கலைவாணர் அரங்கில்
நடந்த அண்ணா பிறந்தநாள் விழாவில்.

முட்டாளே! முட்டாளே! ஏமாளி முட்டாளே! தமிழகத்தில் வாழும் பிற மாநிலத்தவர்களும் தமிழர்களே என்றால், கருநாடகத்தில், —மலையாளத்தில், மகாராட்டிரத்தில்(பம்பாயில்) இன்னும் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களும் பிற மாநிலத்தவர்களாகத்தானே அங்குள்ளவர்களாலோ, அல்லது உன் போலும் பெருந்(!)தன்மை மிக்கவர்களாலோ — நினைக்கப்பெற வேண்டும்! இல்லெனில், ஒருமைப்பாடு என்று நீ—கையூட்டே அமைச்சுப் பதவியாகக் கருதிக் கொண்டு, செயலலிதா காலைப் பிடித்து வாழும் நீ—பேசும் 'தத்துவம்' வெறும் குப்பையில்லையா? இதையே பேசி இன்னும் எத்தனை நாளைக்கு இத் தமிழக மக்களை ஏமாற்றிப் பொறுக்கித் தின்னப் பார்க்கிறாய்? —குத்தீட்டி

இந்திய ஒருமைப்பாடு என்பது பொய்!
தேசிய இனவிடுதலையே மெய்!

தமிழ்நாடு பிரிந்து, தனிநாடு ஆகியே தீரவேண்டும்!

—தந்தை பெரியார்—

[இக்கட்டுரை பெரியாரால் எழுதப்பெற்று 14-5-71 'உண்மை' இதழில் வெளிவந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னரே தந்தை பெரியாரின் அறிவின் ஊற்று இது. தந்தை பெரியாரைப் பின்பற்றுவதாய்ப் பீற்றிக் கொள்ளும் தமிழர்களே, இதற்கு என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள்?].

ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறியவுடன் தமிழ்நாடு அடிமை நாடாகவே ஆகிவிட்டது. அதுவும் பார்ப்பனருக்கு (தமிழ்நாடு) அடிமை நாடாகவே ஆகிவிட்டது. ஆட்சிக்குக் குடி(ஜன)நாயகம் என்கின்ற முறை ஏற்படுத்தப்பட்டு விட்டதால் தமிழர்கள் பதவிக்கு ஆகப் போட்டி போட்டுக் கொண்டு மான இழிவை (ஈனத்தை)ப் பற்றிக் கவலைப்படாமல் அடிமைத் தன்மைக்கு முந்தும்படி ஆகிவிட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஆங்கில(அவர்களது)ஆட்சிக்குக் குந்தகமில்லாமல் தமிழர் நலத்திற்குக் குமுகாய நலம் உள்பட எந்த வகையான தீர்மானமும் செய்து கொள்ள உரிமை இருந்து வந்தது.

ஆங்கிலேயன் போனவுடன் ஆட்சி பேராயக் கட்சி(காங்கிரஸ்) (பார்ப்பனர்)கைக்கு வந்தவுடன் அதன்முதல் பணியாக சாதி, மதம், மூட நம்பிக்கை, கடவுள்கள், கடவுள் தன்மைகள், மத (பார்ப்பன உயர்வு)'தர்ம'ங்கள் காப்பாற்றப்படவும் தமிழ்நாடு என்றென்றும் வட நாட்டானுக்குப் (பார்ப்பனருக்கு) அடிமையாக இருக்கவும், இந்தக் கொள்கையே இந்திய ஆட்சிக்கு என்றென்றும் அடிப்படை (மூலாதார)—மாற்றப்படாத கொள்கையாக இருக்கவுமான சட்டம் பார்ப்பனராலேயே செய்து கொள்ளப்பட்டு விட்டது. இந்தப்படியே இன்று இந்திய ஆட்சி என்னும் பேரால் தமிழ்நாட்டில் (தமிழர் குமுகாயத்திற்கு) ஆட்சி இருந்து வருகிறது.

இந்த ஆட்சி 'தர்ம'ப்படி தமிழ்நாட்டில் உள்ள தமிழ்மக்கள்(மொத்த இந்துகுமுகாயத்தில்) 100க்கு 97பேர் விழுக்காடுள்ள தமிழ் மக்கள்—தமிழ்நாட்டில் 100க்கு 3 பேர் விழுக்காடுள்ள பார்ப்பன மக்களால் சட்டப்படி 4-ஆம் சாதியான், சூத்திரன், இழி மகன் என்று சொல்லப்படும் படியான தன்மையில் வாழ்ந்துவர வேண்டியதாய் இருந்து வருகிறார்கள்.

இந்திய ஆட்சியின் மூல அடிப்படை என்பது தமிழர்களின் இந்த இழிநிலை என்றென்றும் மாற்றப்படக் கூடாதது என்பதேயாகும். இந்தத் துறையில் இந்த நிலையை மாற்ற நாம் எந்த ஒரு சிறு அளவுக்கு முயற்சி செய்தாலும் நினைத்தாலும் அ'து இன்றைய இந்திய ஆட்சிச் சட்டத்திற்கு மாறாகவும் மிகச் சிறு குமுகாயமாகிய பார்ப்பனருக்கு "மத விரோதம்", "சட்ட விரோதம்", "மனம் புண்படும் படியான குற்றம்" என்று கூப்பாடு போடப்பட்டு அடக்கப்பட்டு விடப்படுகிறது. இதற்கு அடிப்படையான சட்ட அமைப்பை மாற்றவோ திருத்தவோ நமக்கு (தமிழனுக்கு) எந்வகையான தகுதியும் வாய்ப்பும் வசதியும் இல்லாமலேயே இருந்து வருகிறது. எப்படி என்றால் சட்டம் செய்யத்தக்க 500க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றம் என்ற சட்ட அவையில் மேலே கண்ட இழிநிலைக் குள்ளான தமிழர்களாகிய நாம்—தமிழ்நாட்டினராகிய நாம்—39 பேர்கள் தாம் இருக்கிறோம். இந்த 39 பேர்களும் பல கட்சிகளாகப் பிரிந்து ஒரே கொள்கை உடையவர்களாக இல்லாமல், பல பிரிவினராகி நமக்கு எதிரான கொள்கை உடையவர்களாகவும் கூடச் சிதறி இருக்கிறார்கள். மற்றும், "சாதி ஒழிக்கப்பட வேண்டும்" என்ற சொல்லைப் பாராளு மன்றச் சட்ட அவையில் நாட்டுச் சட்ட மன்றத்தில் கூறக் கூட முடியாதவர்களாக—கூடாதவர்களாக—இருந்து வருகிறோம்.

ஆங்கிலேயர் காலத்தில் 'மத தர்ம சாஸ்திரங்கள்' எல்லாம் கூட மாற்றப்பட்டு இருக்கின்றன. இன்று உரிமைபெற்ற(சுதந்திர) குடிநாயக ஆட்சியில் மனுதர்மத்திற்கு மாறாகப் பார்ப்பனரால் பார்ப்பன உயர்வுக்கென்றே செய்து கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு வழக்கமரபு—(சமபிரதாயங்)களுக்கு—ஏற்பாட்டிற்கு மாறாக நடக்க உரிமை செய்து கொண்டால், அதுவும் சட்ட அவையில் தீர்மானம் செய்து கொண்டால், அதுகூட 'அரசியல் சட்டப்படி' செல்லுபடி அற்றதாக ஆகிவிடுகிறது.

மற்றும் மதம் என்பதும் 'சாஸ்திரம்' என்பதும் 'தர்மம்' என்பதும் பார்ப்பனருக்கு முழு உரிமை உடையனவாகவும், அவர்களே அவற்றிற்குக் கருத்தாவாகவும், விளக்கம் கூறுபவர் (வியாக்கியானக்காரர்)களாகவும், அறிந்தவர்களாகவும் இருப்பதால் அவை அவர்கள் விருப்பத்தை (இஷ்டத்தை)ப் பொறுத்தனவாகவே இருந்து வருகின்றன.

இப்படிப் பட்ட கடவுள், மத தர்ம 'சாஸ்திர' ஏற்பாடு ஆகியவற்றில் கை வைத்தாலொழிய, மாற்றம் செய்தாலொழிய, நாம் மாந்தர்களாகக் கூடக் கருத முடியாமல், மானமுடையவர்களாக இருக்க முடியாதவர்களாக இருந்து வருவோம். இவை மாத்திரமல்லாமல் ஒரு சிறிதளவு கூட

வளர்ச்சி அடைய முடியாதவர்களாக—முன்னேற்றம் அடைய முடியாதவர்களாக—இருந்து வருகிறோம்.

குமுகாயத் துறையில் நம்துநிலை இது என்றால் பொருளியல் துறையில் ஆட்சி அலுவலக ஊழியத் துறைகளில் பார்ப்பனர்கள், மற்ற நாட்டவர்கள் "உண்டு கழித்த எச்சிலையில்" ஒட்டுப் பொறுக்கி வயிறு வளர்க்க வேண்டியவர்கள் போலவே இருந்து வருகிறோம். பெரும் பெரும் தொழில்—உரிமங்கள் தொழில் நிறுவனங்கள் வடநாட்டானுக்கும் பார்ப்பானுக்கும்தாம்! நாடாளும் அதிகாரமாகிய மாநில மாவட்ட ஆட்சித் தலைமை வட நாட்டார்களுக்கும் பார்ப்பனர்களுக்கும்தாம்! வணிக முறையிலும் நம் நாட்டுப் பணம் வட நாட்டுக்குப் போகும்படியான வணிகம், சரக்கு, பண்டங்கள் போக்குவரத்து அதிகமாயிருக்கிறதே தவிர-வடநாட்டான்களே பெரிதும் நம் நாட்டுக்கு வந்து தொழில் நடத்துபவர்களாக இருக்கிறார்களே ஒழிய— இத் துறைகளில் நாம் வைக்கப்படத் தக்க வெகு சிறு அளவில்தான் இருந்து வருகிறோம். செய்தித்தாள் துறையில் கூட வடநாட்டார்கள், பார்ப்பனர்கள்—நம் குமுகாயத்திற்கு எதிரிகளாய் இருந்து வாழவேண்டியவர்கள் ஆகியவர்கள் கையில்தான் முற்றுமை உரிமையாய் இருந்து வருகிறதே ஒழிய நம் நாட்டு உணர்ச்சியோ இன உணர்ச்சியோ கொண்டவர்களிடம் சாய்காலுள்ள செய்தித்தாள்கள் இல்லவே இல்லை.

ஆகவே, இன்றைய தமிழ்நாடு பார்ப்பான்—வடநாட்டான் முதலியவர் நலன்களுக்காக உள்ளதே தவிர, தமிழர்கள், முசுலீம்—கிறித்தவர்—முதலிய தமிழ்நாடு, தமிழ் நாட்டவர் ஆகியவர்களின் நலத்திற்கு—வளர்ச்சிக்கு—முன்னேற்றத்திற்கு—ஏற்ற தன்மையில் இல்லை; இல்லவே இல்லை என்றுதான் உறுதியாய் கூற வேண்டியதிருக்கிறது. இது தானா தமிழ் நாட்டின் நிலை, தமிழன் நிலை என்று ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டும்.

இந்த நிலைக்குக் காரணம் என்ன? ஆங்கிலேயர் நம் நாட்டைவிட்டு வெளியேறியவுடன் 'தமிழ் நாடு தமிழருக்கு' என்று ஆகி இருந்தால் நாம் இன்றைய சூழ்நிலையில் கீழ் நிலையில் இருந்து வர முடிந்திருக்குமா? இந்திய ஆட்சிப் பிடிப்பில் இருந்து பர்மா விலகித் தனி உரிமை நாடாக ஆகிவிட்டதால் அதற்கு (பர்மாவுக்கு) ஏற்பட்ட கெடுதி என்ன? நம்மைவிடப் பர்மியர் மேலானவர்களா? ஆட்சித் திறமையுடையவர்களா? செல்வ எண்ணிக்கை அதிகமுடையவர்களா? செல்வ வசதி உடையவர்களா? எதில் மேம்பட்டவர்கள்?

இலங்கை ஒரு மிகச் சிறிய நாடு. தனி நாடாக இருந்து வருவதில் அதற்கு ஏற்பட்ட கெடுதல் என்ன? ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்திலேயே புதுக்கோட்டை, கொச்சி போன்ற நமது ஒரு வட்டார அளவுள்ள நாடுகள் தனித் தனி உரிமையுள்ள (சுதந்திர) நாடுகளாக இருந்து வந்ததில் அந்த நாடுகளுக்கு ஏற்பட்ட கெடுதி என்ன? இவ்வளவு தானா? ஐரோப்பாவில் நம் தமிழ் நாட்டு எல்லையை விட—மக்கள் தொகையைவிட,—'வசதிக் குறைவை' விட—எத்தனையோ அளவு சிறிதான ஏறத்தாழ 10 நாடுகள் முழு உரிமைபெற்று 50,60 ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருந்து வருகின்றனவே! சில உலகச் சந்தைகளையே வெற்றி கொண்டு வாழ்கின்றனவே! அதுமாதிரியே ஒவ்வொரு நாடும் ஒரு வியப்பான செயலைச் செய்து உலகப் புகழ் பெறுகின்றதே! அவற்றிற்கு ஏற்பட்ட கெடுதி என்ன? என்று சிந்திக்க வேண்டாமா?

அது மாத்திரமா! இந்தியாவிலேயே நமக்கு மேற்பட்ட ஆற்றலோ, (சக்தியோ) அறிவோ வேறு எந்த நாட்டுக்காவது இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு உத்திரபிரதேசம் (U. P) இந்தியாவில் காட்டு விலங்காண்டி (மிராண்டி) நாடு; மூட நம்பிக்கை நாடு; கல்வியறிவில்லாத நாடு, அதுதான். அந்த நாட்டானுக்குத் தான் இன்று ஆட்சித் தலைமை வழிவழியாக (பாரம்பரியமாக) இருந்து வருகிறது. மற்றும் வட நாட்டாரின் தகுதி (யோக்கியதை) அறிவு, வாழ்க்கை உயர்வு முதலியவை பற்றித் தெரிய வேண்டுமானால் நமக்கு நன்றாய் விளங்குமே! மற்றும் தென்னாட்டை எடுத்துக் கொண்டாலும் கேரளம், ஆந்திரம், கர்நாடகம் (கன்னடம்) ஆகிய நாட்டாரின் கலையொழுக்கம், நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றிற்கும் உள்ள வேறுபாட்டைப் பார்த்தாலும் தமிழ் நாட்டின் உயர்வு முதலிய தன்மைகள் நன்றாய் உணரலாகும்.

இப்படிப்பட்ட உயர்ந்த நாடு ஏன், எதற்காக, அடிமை நாடாக—அதுவும் 1500 கற்களுக்கு அப்பாற்பட்ட ஒரு பழமைப் பற்றுள்ள அநாகரிக நாட்டு ஆட்சிக்கு அடிமையாக இருக்கவேண்டும்? பார்ப்பானோ வடநாட்டானோ பதவிப் பித்தனாகிய பேராயக் கட்சிக் (காங்கிரஸ்) காரனோ ஒருநாளும் தமிழ்நாடு சுதந்திரமடைந்த தனித் தமிழ்நாடு ஆகச் சம்மதியான். ஆனால் மற்ற மக்கள் 100க்கு 75க்கு மேற்பட 90 விழுக்காட்டு மக்கள் இணங்குவார்கள்; ஆதரவளிப்பார்கள்; ஆனால் வடநாட்டார் எளிதில் இணங்கமாட்டார்கள். ஆதலால் நாம் இந்தத் "தனித் தமிழ் முழு உரிமை நாடு" பெறக் கிளர்ச்சி செய்தாகவேண்டும்! பெரும் போராட்டம் நடைபெற வேண்டியிருக்கும்! சிலராவது—மாளவும் அணியமா (தயாரா) யிருக்க வேண்டும். இது இந்தத் தி.மு.க ஆட்சியில்தான்

(தொடர்ச்சி 12- ஆம் பக்கம் பார்க்க)

தமிழின அடையாளச் சிக்கலும் தமிழ்ப் பயிற்று மொழியும்!

கா. செ. தமிழடியான் க.இ.
துணைச் செயலாளர்
தூய தமிழ் ஆய்வியக்கச் செயலகம், உ. த. மு. க.

(கடந்த 30-8-92 அன்று மதுரையில் உ.த.மு.க.வின் சார்பில் நடந்த 'தமிழ் வழிக் கல்வி'க் கலந்தாய்வுக் கூட்டத்தில் முன் வைக்கப் பெற்ற கட்டுரை, இது. நிகழ்வில் கலந்து கொள்ளாத அன்பர்களுக்காகவும் பிறர்க்காகவும் இங்கு வெளியிடப் பெறுகிறது.)

தமிழ் இனம் எதுவென அடையாளப்படுத்தும் முயற்சிகளும் தமிழ்ப் பயிற்சிமொழி பற்றிய சிந்தனைகளும் தமிழக அளவில் கூர்மை பெற்று வரும் நேரம் இது. இதேபோல ஓரோர் இனமும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் தேவை நீடுருக் கொண்டு உலகெங்கும் எழுந்துள்ளது. இனமில்லை, மொழியில்லை என இத்தனைக் காலமும் முழக்கமிட்டதோடு, இனம் பற்றிய கருத்தாடலைப் பாப்புலிசம், குழுவறட்டியம், குறுங்குழுத்தருக்கம் என்றெல்லாம் பகடியாடிய அகல் இந்திய பொதுவுடைமையர் கூட அது பற்றிச் சிந்திக்கவும் அதன் இருப்பினை அதற்கேயுள்ள புரிமானங்களோடு ஏற்றமையவும் இக்கால் தலைப்பட்டுள்ளனர்.

ஒரு மாந்தனை அடையாளப் படுத்துதலில் பின்வரும் மூன்று நெறிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

1. மொழிவழி அடையாளப்படுத்தல்.
2. இனவழி அடையாளப்படுத்தல்.
3. நாட்டுவழி அடையாளப்படுத்தல்.

இம்மூன்று நெறிகளையும் விரிவாகத் தனித்தனி ஆய்ந்து தக்கது கொள்வது (Inductive method)—தொகுப்பளவை:—தனித்தனிச் செய்திகளை வகுத்தும் தொகுத்தும் விரிவாக ஆய்வதின் மூலம் மெய்காணும் முறை.) இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வு முறை புறச் சான்றுகளைத் தள்ளுவதில்லை. எனினும் அகச் சான்றுகளால் பெரிதும் இயல்வது. உள்ளதிலிருந்து உண்மையைத் தேடும் முயற்சியில் இதன் பங்களிப்பு கூடுதலாகும்.

மொழி ஒரு கருவி. ஒருவனுடைய கருத்துகளை அடுத்தவனுக்கு அறிவிக்கும் எடுத்துரைப்பு (Communication) பெரிதும் மொழிவழியே நிகழ்கிறது. செய்கைகளால் எடுத்துரைப்பு நிகழ்ந்த காலத்துங்கூட அச் செய்கைகளே ஒரு மொழியாகக் கொள்ளப்பட்டது. மாந்தனுடைய திரிபாக்கத்தில் அவன் வாழ்வோடு பாவி மரபாக நிமிர்ந்து, கலை, நாகரிக, பண்பாட்டு உயர்ச்சியினை முதல் தோற்றத்திலேயே (Prima facie) உலகுக்கு அறிவிக்கும் பளிக்கறையாக அமைவதுங்கூட மொழியே. மாந்தனுடைய திரிபாக்க நிலையில் அ'து ஒரு கண்டுபிடிப்பு என்னும் போது மொழி அறிவியலுமாகும். தனக்கு ஒரு வரலாறு கொள்வதோடு தானே ஒரு வரலாறாகி நிற்பதால் அ'து ஒரு வரலாற்றுவணமுமாகும். இருந்தும் பல தேசிய இனங்களின் நடுவே ஓரினத்தை அடையாளங் காண்பதில் அ'து ஒரு சார்குறியே தவிர, ஒரே குறி அன்று. காரணம் மொழி ஒரு நிலையான அடையாளமே அன்று. அது மாந்தனுடைய சூழமைவுகளால் அவனுக்காவது பிறப்போடு வருவதன்று. பிறந்த குழந்தை எப்படி எம்மதமுஞ் சாராததோ அதுபோல ஒரு மொழியும் பேசாதது. தாய் தந்தையரின் மதங்கொண்டும் மொழி கொண்டும் அக் குழந்தை அறியப்படுகிறது. என்றாலும் பெற்றோர் மொழியை—தாய் மொழியைத்—தாய் மொழி என்பது ஒரு கருத்தாக்கம். தாய்வழிக் குமுகம் உலகளாவி நின்றநாளை நினைவூட்டிக் கொண்டிருக்கும் ஒரு மரபுச் சொல் விரிககின் பெருகும் என்பதால் இ'து இவ்வளவில் நிற்க. பின்னொரு நாளில் தானாகவே மாற்றிக் கொள்ளுவது ஒருவர்க்கு இயலாதது. ஏனெனில் மொழி ஒரு மாந்தனுக்குக் கிழமைப் பொருளாவது. அதனாலேயே உரிமைப் பொருளாகிக் கூர்தலறம் பெறுகிறது. இக்காரணங்களால் மொழிவழி மாந்தனை அடையாளங் காண்பது ஓரளவுக்கு ஏற்புடையதாகும்.

நாட்டு என்ற சொல் மெலித்தல் விகாரம் பெற்று நாடு என்றானது. ஒரு மாந்தன் எங்கெல்லாம தன் குடியை, கொடியை, கோலை நாட்டுகிறானோ அவையெல்லாம் அவன் நாடாகும. இக்காலத்திலோவெனில் எங்கெல்லாம் அவன் குடியுரிமை பெறுகின்றானோ அவையெல்லாம் அவனுடைய நாடாகும். அ∴தாவது அது அவனுடைய உடைமைப் பொருளாகும். இது வரும், போகும்;

நிலையான அளவீடு இல்லை. இனி ஒரு நாட்டில் வாழ்பவர் எல்லாமும் அந் நாட்டினத்தவர் அல்லர். பலரும் அங்கு வாழ்தல் கூடும். ஆகவே அடையாளப் படுத்துதலின் நெறிமுறைகளில் வலுவும் செறிவும் அற்ற நெறி நாட்டு வழி அடையாளப்படுத்துதலாகும். என்றாலும் மொழியும் இனமும் இயங்க ஒரு தளமாக அமைவதன் வழி அடையாளக் கூறுகளில் நாடும் அடங்கும்.

இனம் என்பது ஒரு மாந்தனுக்குப் பிறவியால் வருவது. விரும்பினாலும் மாறாதது; அது மரபியல் அணுக்களால் நேர்வது. அதனைப் பிளக்கலாம். பிரிக்கலாம்; பிறவற்றோடு இணைக்கலாம். வீரியவித்துகள் (Hybrid) அதனால் விளையலாம். என்றாலும் அடிப்படைக் கூறுகள் மாறுவதில்லை. அதனாலேயே இனம் நிலையானது. ஒரு நீக்குரோவக் குழந்தை ஆங்கிலப் பெற்றோரிடம் வளர்ந்து ஆங்கிலமொழி பேசி, ஆங்கிலேயர் நாட்டில் வாழ்ந்தாலும், அது இனத்தால் நீக்குரோவே; பார்ப்பனர் போல. எனவே அடையாளப்படுத்துதலில் சீரிய செப்பமான நெறி இனவழி அடையாளப் படுத்துதலே. மொழி, இனம், நாடென்னும் நேர்ச் சுற்றில் வந்தாலும், நாடு, இனம், மொழி என்னும் எதிர்ச்சுற்றில் வந்தாலும், நடுவிடம் பெறுவது இனமே என்னில், அடிப்படை இதுவே என்பதும் பிறவிரண்டும் அதனைத் தொட்டும தொடர்ந்தும் சிறகாக வருவன என்பதும் புலனாகும்.

இனி, ஓரினம் சிக்கலுறுவதற்கு முன் அது பிரிதோரினத்திற்கு அல்லது கருத்தாக்கத்திற்கு அடிமையாதல் நிகழும். இந்த அடிமையாதலும் இருவழிகளில் சாலும். சிந்தனைக் கலப்பு (Mental attack) ஒன்று. பருப்பொருள் (அல்) வலுத்தாக்குதல் (Physical attack) மற்றொன்று. இவற்றுள் சிந்தனைக் கலப்பு மிகக் கொடியது. ஒருவனை நெட்டுறக்கத்தில் ஆழ்த்திச் செயல் மலடாய் ஆக்குவது. மொழி, குமுகம், அரசியல், பொருளியல், சமயம், பண்பாடு, கலை போன்ற மாந்த வாழ்வின் மிக அணுக்கக் கூறுகளில் அவ்வினத்தின அகப் பண்பை, அப்பண்பு மலர்ச்சியுற்ற மண்ணின் மரபுகளைக் கலக்கிச் சிதர்த்து, மீட்சிபெற வழியின்றி அடிமை உளையில (சேற்றில்) அழுத்துவது.

வலுத்தாக்குதல் ஒருமுகத் தாக்கங்கொண்டது. படையும் கலனும் பாரிய வலுவும் அதன் கருப்பொருள்கள்.

சிந்தனைக் கலப்புக்குக் காரறிவும் கரவுள்ளமும் வேண்டும். ஏனெனில் அது பன்முகத்தாக்கங் கொண்டது. பரந்த செயல் தளம் உள்ளது.

இந்தக் கருதுகோளை வைத்து மொழி, இன, நாட்டு நிலைகளில் தமிழன் எவ்வாறு தளைப்பட்டான் என்பதைப் பார்ப்போம்.

முதல் தாக்குதல் அவன் மொழி மீது—தமிழ் மீது—தொடுக்கப்பட்டது. ஆட்சி, அதிகாரம், வழிபாடு, கலை, இலக்கியம், பாடம், பயிற்சி என்ற பயன் நிலைகளில் அது தவிர்க்கப்பெற்றது. அது இழிந்தது [நீச மொழி), எதற்குந் தகுதியற்றது என்னும் கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப் பெற்றது. கூறுவ கூறும் சிலம்புபோல் அவனேயதைத் திருப்பிச் சொல்லுமாறு அவன் மனத்திலும் மண்டையிலும் பதியனிடப்பெற்றது. வடமொழி தமிழில் கலக்கப்பெற்றது. இணைச் சொற்கள் எடுத்தெறியப்பட்டன. மொழித் தூய்மைகெட்டது. மொழி வளர்ச்சி தடைப்பட்டது. அயல் சொல்லும் சொல் என்ற அளவில் வரவில்லை. அச்சொல்லின் பொருளும் அப்பொருளுணர்த்தும் பண்பாட்டுக் கூறுகளும் வந்தே கலந்தன. அதனால் இம் மண்ணுக்குப் பொருந்தாத—இம்மண்ணில் இருந்தேயிராத மெய்யியல் கருத்துகள் விதைக்கப்பெற்றன. காட்டாக, 'ஒப்புக்கொடுக்கும் மெய்ம்மம்' (சரணாகதித் தத்துவம்) இங்கே கால் பரப்பிய வரலாற்றைச் சொல்லலாம். போற்றிப் பாக்கள் மட்டும் பாடி வந்த தமிழனுக்கு இது புது வரவு. வினையே ஆடவர்க்குயிராகி வந்த தமிழனுக்கு விதியே அயர்வுக்கு மருந்தாக ஆக்கங்கெட்டது. ஆரியம் படிந்ததால் தமிழ் அழகும் பண்பும் கெட்டது.

ஆட்சி அதிகாரங்களில் தமிழ்மொழியும் தமிழ் நெறியுந் தள்ளப் பெற்று மனுவும சமசுகிருதமும் கொள்ளப்பெற்றன. 'நின் முன்னோரெல்லாம் பார்ப்பனர் நோவன செய்திலர்'— 'பார்ப்பனர்க்கல்லது பணிபு அறிந்திலையே'— எனப் புலவரெலாம் பாராட்டி மகிழும் வண்ணம் மன்னர்கள் பார்ப்பனரை உச்சிமோந்து உயர் பதவியளித்தனர். கொடியாருடையதாயினும் கொற்றம் பார்ப்பனர்க்கே ஆயிற்று (பார்க்க: அர்த்த சாத்திரம். "பார்ப்பனரால் ஆளுமை (நிருவகிக்க)ப்படும் சத்திரியர்ஆட்சி எப்போதும் வெற்றிபெறும்; பிறரால் வெல்லமுடியாது) கணக்கியலில் ஓர் எண்ணுக்கு இயல் மதிப்பும் இடமதிப்பும் உண்டு. அதுபோல் வாய்த்த இயலாலன்றி வைத்த இடத்தாலேயே பார்ப்பனர் வாழ்வு பெற்றுச் சிறந்தனர், தமிழும் தமிழரும் ஆட்சி அதிகாரமிழந்தனர். இதற்காகப் பார்ப்பனர் தமது போர்த் தந்திரங்களான சாம, பேத, தான, தண்டங்களையே பயன்படுத்தினர். அதிலும் முதல் மூன்றே அவர் மிகத் தோந்தன,

தமிழ் தூய்மையற்ற மொழியென இழித்துரைக்கப் பெற்றதாலே வழிபாட்டுப் பயன்பாட்டிலிருந்து நெட்டித்தள்ளப் பெற்றது. தேவமொழியெனச் சிறப்பிக்கப் பெற்ற சமற்கிருதம் அவ்விடத்தைக் கையகங் கொண்டது.

தமிழையே உண்டும் தமிழே உறழ்ந்தும் (தற்பவம்; தற்சமம்)வளர்ந்த சமற்கிருதம் தமிழுக்கு மூத்ததென்றும், தமிழ் அதனால் ஆக்கமும் அகல-

மும் பெற்றது என்றும் கதைத்து, இலக்கியத் துறையில் தமிழுக்கு இழிவும் வடமொழிக்குச் சிறப்புங் கற்பிக்கப் பெற்றது. சமற்கிருதம் கற்றவரே அறிஞர் என்பதான கருத்தும் செய்தியாகப் பரப்பப் பெற்றது. ஆண்டுகளால் பழமையுடைய இலக்கியங்களும் தொல்காப்பியமும் வடமொழி இலக்கிய இலக்கணங்களின் வழியும் சார்புமே என்ற கருத்தும் வலிந்து பரப்பப்பெற்றது. சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறுத அகப் பாடல்களையே ஆக்கும் மனவரம்புடையவன் தமிழன். பரத்தைமை அவனுக்குப் பழக்கம். கொண்டி மகளிர் கூட அவன் கொண்டான். ஆயின் பிறனில் விழைந்ததாய்ச் சான்றுகளில்லை- இத்தகைய நெறி முறையோடும் நாகரிகக் கூறுகளோடும் இலக்கியத்தையும் தனி வாழ்வையும் வளர்த்தவன் தமிழன். ஆனால் அவனுக்குத்தான், சூரியன் எழவும் சூழிருள் மறைந்த நிலை, கணவன் வந்ததால், கள்ளக் காதலன் ஓடி மறைந்த உவமையால் விளக்கப் பெற்றது (வடமொழி அகப்பாடலொன்றின் கருத்து).இக்கருத்துப் படிவுகள் பழக்கமாகி, அப்பழக்கம் 'சுப்பிரதீபக் கவிராய'ரின் 'கூளப்பநாயக்கன் காதல்! 'விறலிவிடுதூது' போன்ற காமக்கழிசடைகள் தமிழிலும் தோன்றுமளவுக்குச் சாய்கால் பெற்றன. உவமைகள் உயர்ந்தவையாதலே தமிழ் மரபு. உச்சி முதல் உள்ளங்கால் வரை பெண்ணை நலம் பாராட்டும் பண்பும் தமிழுக்கு வடமொழிப் பங்களிப்பே. இதுபோன்ற மனத்தை மயக்கும் அகச் செய்திகளையும் சிந்தனையின் எல்லை வரை சென்றாலும் விளங்கிக் கொள்ள முடியாத வெற்றுக் (வேதக்)கருத்துகளை, நெறிச் சமைவுகளைத் தமிழன் மண்டையில் ஏற்றி மதியை மயக்கிய கேடும், வடமொழியால் நேர்ந்தது. தமிழன் கண்ட ஊழுக்கும் பார்ப்பனர் தந்த 'விதி'க்கும் சொல்லால் மட்டுமன்று, பொருளாலும் பெருத்த வேறுபாடு உண்டு. உழைக்கும் மக்களை (இங்கே வெகு மக்களாகிய தமிழர்) மயக்குவதற்காகச் சமற்கிருதம் உருவாக்கப்பட்டது— (நூல்; விடுதலைப்போரும் திராவிட மயக்கமும்—தோழர். பி. இராமமூர்த்தி) தமிழ்க் கலைகளும் தடம் புரண்டன. இவ்வாறு தமிழன் இலக்கியம், கலை என்ற தளங்களில் தன் மூல நிலையழிந்து மூளியானன். அவன் இசையும் நாட்டியமுங்கூட இன்றவனுக்கில்லை. பிறரால் கொள்ளையிடப் பெற்றன. தமிழனல் வடமொழி ஆக்கம் பெற்றதே உண்மை. வரம்பிறந்து எழுத எண்ணி அங்குச் சென்ற தமிழன் வளமான இலக்கியங்களை அங்கே படைத்ததும் நிகழ்ந்தது.

நிலத்திணைத் தமிழனுக்குக் கடவுள் கருப்பொருளே. அது முதற்பொருளான கதைவேத நாகரிகத்தால்(?) விளைந்தது.

தமிழனுக்குச் சமயம் இருந்தது. 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்; யாதும் ஊரே யாவருங் கேளிர்' —போன்ற மெய்யியல் கூறுகளே அவற்றின் உள்ளீடாய் அமைந்தன. ஐந்திணைக் கடவுளரும் அண்டப் பெருவெளியின—அகன்றதொரு தாய்மைப் பேராற்றலில் அடக்கங் கொண்டிருந்தன. தாய் வழிக் குமுகமே தமிழனுக்கிருந்தது. தாய்த்தெய்வ வழிபாட்டை பார்ப்பானுக்கு மட்டுமன்று உலகுக்கும் அளித்தவன் தமிழனே.

பார்ப்பனர் உறவால் தந்தை வழிக் குமுகம் அவனை ஆட்கொண்டது. நாலு சாதிக் கடவுளும் நாலுவகைப் பிறப்புக் கதைகளும் பார்ப்பனரால் படைக்கப்பெற்றவை. கால வளர்ச்சியில் கடவுள், வழிபாடு ஆகிய கூறுகள் வகையும் விரிவுமாகத் தொகையில் பெருகித் தமிழ மனச்செறிவைச் அழித்தன. கோயில் வழிபாடு உண்டாகியது. இன்றைய முறையிலான வழிபாடு தொல் தமிழனுக்கில்லை; என்றாலும் படைப்பள்ளி வழிபாடு, முன்னோர் வழிபாடு இருந்தேயுள்ளன. தமிழ் மண் மெல்ல மெல்லக் கூண்டுக்குள் அகப்பட்டது. தமிழ்ச் சமயம், பொருளும் நெறியும் போக்கும் மாறி வேத மதமாகி வேதிய மதமாகப் பின்னும் ஒரு பிறப்பெடுத்துப் பின்னாளில் இந்து மதமாய் இழிந்தது. என்றாலும் இன்றைய இந்துச் சமயம் ஆரியரும் பிறரும் சேர்ந்து குழப்பிய குட்டைதான. அது தெளிய வாய்ப்பில்லை.

மதங்கள் மாந்த வாழ்வை நெறிப்படுத்த வந்ததாய்ச் சொல்லப்பெற்றன. ஆனால் அவை இன்றவனை வெறிப்படுத்திக் குமுக வாழ்வைக் குலைக்கின்றன. தமிழக அளவிலும் அகல் இந்தியப் பரப்பிலும் முட்டி மோதி முரண்பட்டு நிற்கும் இந்து, இசுலாம், கிறித்துவம் ஆகிய மூன்று சமயங்களும் ஒரே இனம் (ஆரியர்) மூவேறு தளத்தில் கண்ட மெய்ம்மக் கூறுகளே ஆநிரைகளுக்கு அமர்வு தேடி ஆசிய நடுவிடத்திலிருந்து புறப்பட்ட ஆரியருள் ஒரு பிரிவு மலைக் கடவுளின் வழி இந்திய மண்ணில் கால் வைத்துப் பார்ப்பனராயினர். ஒரு பிரிவு ஈரான் சென்று பின் அங்கிருந்து பிற நடுக்கிழக்கு நாடுகளுக்கும் பரவ, எஞ்சிய ஒரு பிரிவினர் கிரேக்கத்தில் புகுந்தனர். அங்கிருந்த பழங்குடியினருடன் ஊடாடிப் பொருதியும் பொருந்தியும் வாழ்வு நிலை வாய்த்தனர் என்பது வரலாறு. ஆக இம் மூன்று மதங்களும் தமிழனுக்கு அயலானவை. மூவேறு தளங்களில் தமிழனை அடிமை கொண்ட ஆரிய நச்சரவங்களே. (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

அம்பேத்காரியம் + பெரியாரியம் + பெருஞ்சித்திரனாரியம் + மார்க்சியம் = மாந்தநேயம் –< மக்கள் உரிமைப் போராட்டங்கள்!

(தமிழக மக்கள் சிந்தனையாளர்களுக்கு ஒரு திறந்த மடல்)

"அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" — திருக்குறள் 76
(அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவார், அறியாதவர். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது)

மக்களைப் பற்றிச் சிந்திக்கின்ற—செயல்படுகின்ற மாந்தநேயச் சிந்தனையாளர்களே! போராட்ட வீரர்களே! உங்கள் அனைவருக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தோழமையுள்ள வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்கு 'மக்கள்' என்று சிறப்பாகக் குறிப்பிடுவது ஏதேனும் ஒரு வகையில் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படுகின்றவர்களையே நாம் 'மக்கள்' என்கின்றோம். ஆனால் வெவ்வேறு கொள்கையினர் அவர்களுக்கேயுரிய கோணங்களில் பெயர்களில் 'தாழ்த்தப்பட்ட மக்கள்' 'பிற்படுத்தப்பட்ட மக்கள்' 'சூத்திர மக்கள்' 'ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்கள்' 'சுரண்டப்படுகின்ற பாட்டாளி மக்கள்'—என்று பெயர் சூட்டி அழைக்கலாம். இந்தியத் துணைக் கண்டத்தில் அம்பேத்காரியம், பெரியாரியம், பெருஞ்சித்திரனாரியம், மார்க்சியம் போன்றவற்றின் உள்ளீடு மாந்தநேயமாகவும், அதிலிருந்து மக்கள் உரிமைக்கான போராட்டமாகவும் இங்குள்ள குமுகாய அமைப்பிற்கேற்ப வெவ்வேறு வடிவங் கொண்டிருக்கின்றது.

தாங்கள் பிறந்து வளர்ந்த குமுகச் சூழலுக்கேற்பவும், தாங்கள் பட்டறிந்த அறிவு நிலைக்கேற்பவும், அம் மாபெரும் சிந்தனையாளர்கள் மக்கள் உரிமைக்கான கொள்கைகளை வகுத்துப் போராட்டங்களை நடத்தினர்; அந்தந்தக் கொள்கைகளின் பற்றுளர்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். ஆனால் அப்போராட்டங்கள் குமுகப் பொருளியல் அரசியல் நிலைகளில் ஆளும் வகுப்பாகிய ஆரியப் பார்ப்பனியத்தையும் தரகு முதலாளியத்தையும் முழுமையாகச் சிதைக்கவில்லை.

ஒவ்வொருவருக்கும் தாங்கள் பின்பற்றுகின்ற கொள்கையே சிறந்ததாகத் தெரியலாம். ஆனால் இவையெல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு குமுக இயங்கியல் இருக்குமென்பதைப் பலர் சிந்திப்பதில்லை. இதுவே இயங்காவியல் நிலைக்கும் எதிர்ப்புரட்சி நிலைக்கும் இட்டுச் செல்கின்றது. இங்குள்ள பெரும்பான்மையான மக்களின் மனவுணர்வையும் அறிவுணர்வையும் சரியாகக் கணக்கிடாமலும், குமுக இயங்கியலுக்கேற்ப அறிவியல் வழியில் தங்கள் கொள்கைகளை வகுத்துக் கொள்ளாமலும் தங்கள் முயற்சியும் உழைப்பும் வீணாகித் தங்களைப் பின்பற்றிய மக்களையும் பல ஆண்டுகள் அலைக்கழித்து விட்டனர்.

இன்று அம்பேத்காரியம், பெரியாரியம், பெருஞ்சித்திரனாரியம், மார்க்சியம் போன்ற கொள்கைகளின் வழிவந்தவர்களில், ஒரு பிரிவினர் ஆளும் வகுப்புத் தலைமையை முழுமையாக எதிர்க்காமலும், எலும்புத் துண்டு சலுகைகளுக்காகவே சிறு சிறு போராட்டங்களை நடத்தியும் அவர்களுக்குச் சார்பாக இயங்குகின்றனர். மற்றொரு பிரிவினர் குமுக இயங்கியலுக்கேற்ப முதன்மை முரண்பாட்டின் வழியே மொழித் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் ஒருங்கிணைகின்றனர்.

பல்வேறு மொழித் தேசிய இனங்களையும்—அவற்றுக்கேயுரிய வெவ்வேறு பண்பாடுகளையும் பொருளியல் உறவுகளையும் அரசியல் முதிர்ச்சிகளையும் கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை அம்பேத்காரியம், பெரியாரியம் முதன்மையாகக் குறிப்பிடுகின்ற இட ஒதுக்கீட்டின் மூலமோ பகுத்தறிவுக் கொள்கைகளின் மூலமோ மட்டும் முன்னேற்றிவிட முடியாது. முழு உரிமைக்கானதும், மதங்களின் இருப்பிற்கான காரணங்களையும் மக்களுக்கு விளங்க வைத்துப் படிப்படியாக ஓர் அரசியல் செயற்பாட்டின் மூலமே இவர்களின் விடுதலையைப் பெற முடியும்.

தமிழ்த் தேசிய இன உணர்வையும் அதன் விடுதலையையும் முதன்மைப்படுத்தியுள்ள பெருஞ்சித்திரனாரியம், இன்றைய இந்தியப்—பார்ப்பனிய அரசியல் சூழ்நிலையில் சரியானதே என்றாலும்,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" — என்பதை

மனங் கொண்டாலும்,

நம் தமிழ்த் தேசிய இன விடுதலைக்குப் பொது எதிரிகளாயுள்ள ஆரியப் பார்ப்பனியத்தையும் பெருந்தரகு முதலாளியத்தையும் எதிர்த்துப் போராடுகையில், நமக்குத் துணையாக வராவிட்டாலும் குறுக்கே தடையாகவுள்ள சில நிலவுடைமை மற்றும் சிறு தரகு முதலாளிய நந்திகளை அகற்றாமல் நாம் எப்படி நம் இலக்கை அடைய முடியும்? பல்வேறு வகுப்புப் பிரிவினையுள்ள குமுக அமைப்பில் எல்லாத் தமிழர்களும் இணைந்துதான் போராடவேண்டுமென்பது இலவுகாத்த கிளிக் கதையாகத்தான்

Scanned with CamScanner

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும். இன்றைய இந்திய அரசியல் சூழ்நிலையில் எந்த வகுப்பும் தேசிய இன விடுதலையை முன் வைத்துப் போராடினாலும், அதுவும் குமுக மாற்றத்திற்கான புரட்சியின்பாற்பட்டதே! அப் போராட்டத்தின் ஊடேதான் அடித்தள பாட்டாளி வகுப்பும் விடுதலை பெறும். ஆனால் மேல் நிலையிலுள்ள எந்த வகுப்பும் இதற்காகப் போராடாதபோது அவர்களை எப்படி நாம் நம்பிக்கொண்டிருப்பது?

மார்க்சிய இயங்கியலை உள்வாங்கிக் கொண்டு, இங்குள்ள குமுகச் சூழலுக்கேற்ப பயன் படுத்தாமல், ஒவ்வொரு தீர்வுக்கும் இன்றும் மார்க்சிய—இலெனினிய—மாவோ புத்தகங்களையே பக்கம் பார்த்து விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கின்ற மார்க்சிய சிந்தனையாளர்களே! உங்கள் இயங்காவியல் சிந்தனையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு மக்கள் தங்கள் 'தேசிய இன விடுதலையை' நோக்கிச் சென்றுகொண்டிருப்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியைக் காட்டாமல் இருந்திருந்தால், மக்கள் இந்நேரம் தங்கள் இலக்கை அடைந்திருப்பர்.

ஆகவே மக்கள் சிந்தனையாளர்களே! இனியேனும் உங்கள் கடந்த காலப் பட்டறிவிலிருந்தும் இந்தியாவிலும் உலகிலும் மக்களின் விடுதலைக்கான போராட்டங்களின் நடைமுறையிலிருந்தும் தமிழக மக்களுக்கு வெவ்வேறு வழியைக் காட்டாமல் குமுக இயங்கியலுக்கேற்ப சரியான பொதுவழியைக் காட்டுமாறு வேண்டுகின்றோம். நன்றி.

—அன்புடன், மாந்தநேயன் (க.கண்ணன்) 10-9-92

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியக் கூடிய செயலாகும். எனவே, இந்த நோக்கத்துடனேயே இந்த ஆட்சியை வலுப்படுத்துங்கள். தி.மு.க ஆட்சி என்றால் அது திராவிடர் கழகத்தின் ஒரு பாகம்தான். திராவிடர் கழகம். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற கொள்கைச் சொல்லில் வளர்ந்ததாகும். அந்த 35 ஆண்டுகட்கு முன் நாம் "திராடவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கிய காலத்தில், இந்தப் பார்ப்பனர், "எலி வளை எலிகளுக்கே" என்று கூப்பாடு போட்டார்கள், காரணம் அப்போது அவர்கள் தங்களைப் பூனைகளாக நினைத்துக்கொண்டு நம்மை எலிகளாகக் கருதினார்கள். இப்போது நாம் தனி நாடு பெறுவதன் மூலம்தான் நாம் "பூனைகள்" ஆக முடியும் "எலிகளை" விரட்ட முடியும். அல்லாதவரை நாம் எலிகள் தாம்! தமிழர்களே சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! பக்குவமடையுங்கள்; போர் காத்திருக்கிறது! O

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அரசு என்பது ஒரு வகுப்பு(வர்க்கம்) (இந்தியாவைப் பொறுத்த அளவில் இன நிலையில் பார்ப்பனியமும், பொருள் நிலையில் முதலாளியமும்) இன்னொரு வகுப்பின் (வர்க்கத்தின்) ஆட்சியை நிலைப்படுத்தும் கருவி. தனி உடைமை இருக்கின்றவரை 'மக்கள் நாயகக் குடியரசு' (Democratic Republic) என்று அழைக்கப்படும் அரசு என்ற கருவியும், முதலாளிகள் பாட்டாளிகளை நசுக்கப் பயன்படுத்தும் கருவிதான்" என்றும் இலெனின் கருத்தறிவிக்கிறார். மேலும் அவர் இன்னோர் இடத்தில்,

'தன்னுரிமையை அஃதாவது பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிப்பவர்களைப் பிரிவினைவாதிகள்—பிரிவினைக்கு ஊக்குவிப்பவர்கள் என்று குற்றம் சாட்டுவது முட்டாள்தனமானது; நயவஞ்சகமானது. மணவிலக்கு உரிமையை ஆதரிப்பதால் குடும்பத்தைக் குலைக்க ஊக்குவிப்பதற்குச் சமம் என்னும் முட்டாள்தனமான—பாசாங்குத்தனமான குற்றச்சாட்டு போன்றதாகும்.'—இலெனின் "Selections from V.I. Lenin and J.V. Stalin on National colonial Question"—பக். 22

—'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை' பக். 51

மேலும் கூட்டுச் சேரா நாடுகளின் இரண்டாவது மாநாடு 1964-ஆம் ஆண்டு கெய்ரோவில் நடைபெற்றபோது, "*தங்கள் அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னுரிமை உண்டு*" என்ற தீர்மானம் அங்கு நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்தை இந்தியாவும் ஏற்றுக் கொண்டு உள்ளது.

தேசிய இன விடுதலை என்பது இயற்கையின் ஒரு கோட்பாடு. வெறும் 'அரசியல் சூப்பான்களாக இருப்பவர்களுக்கு மொழி, இனம், நாடு பற்றி எந்தக் கவலையும் இருக்க முடியாது! அவர்கள் வெறும் பொறுக்கித் தின்னிகளே! மக்கள் உரிமைகளைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை.

எனவே, பாட்டாளி மக்கள் கட்சி செய்யும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழர் பேராதரவு தர வேண்டுவது அவர்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். O

TN/MS (C)657

நூல்-அஞ்சல்

பெறுநர்

Scanned with CamScanner